போதும் போதும்
தமிழர் கொலை

ஆசிரியர் அமுதனார்
ஆக்கியது.

பதிப்புரிமை ஆசிரியர்க்கே

விலை ஆறணா

1. பழந்தமிழனின் பண்பாடு

தமிழன் யாவன் ?

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவன் தமிழன். தமிழைத் தாயாக வணங்குபவன் தமிழன். தமிழின் உயர்வே தன் உயர்வு, தமிழின் தாழ்வே தன் தாழ்வு என்று உறுதியாக உணர்பவன் தமிழன்.

தமிழை இகழாதவன் தமிழன். தமிழைப் பிறர் தூற்றப் பொறாதவன் தமிழன். தமிழ்மரபினைக் கெடுக்காதவன் தமிழன்.

தமிழிலக்கணவிலக்கியங்களைக் கற்க ஆவல்கொள்பவன் தமிழன். அவற்றைக் கற்பவன் தமிழன். அவற்றை விரும்பிக் கேட்பவன் தமிழன். அவற்றின் வழி நிற்பவன் தமிழன்.

தமிழைப் பிறர் போற்றுமாறு செய்பவன் தமிழன். தமிழ்மொழியின் சிறப்பினை உலகம் உணருமாறு செய்பவன் தமிழன். புதிய புதிய கலைகளைத் தமிழ்மொழியில் வளர்ப்பவன் தமிழன்.

கல்விக்குப் பயன் அறிவும் அறிவுக்குப் பயன் ஒழுக்கமுமே ஆகலின், தன் முன்னோர் இயற்றிய ஒப்பற்ற நீதிநூல்களில் விதித்த அறங்களைச் செய்து புகழோடு விளங்குபவன் தமிழன். அந்நூல்களில் விலக்கியவற்றை விலக்கி, தனக்கும் தன் மொழிக்கும் தன் நாட்டுக்கும் பழி வாராமல் வாழ்க்கையை நடத்துபவன் தமிழன். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப்பொருள்களையும் அடைவதையே குறிக்கோளாகக் கொண்டவன் தமிழன். தமிழன் 'பிறரால் சாக என வாழான்'; 'சான்றோரால் பல்யாண்டும் வாழ்க என வாழ்வான்'. உடலழகும், உடையழகும் நடையழகும் நகையழகும் படையழகுமே அழகாகா; கல்வியழகும் ஒழுக்கவழகுமே அழகாகும்—என்பதனை அறிந்தவன் தமிழன்.

தனித்து உண்ணுதவன் தமிழன். பசிப்பிணிமருத்து-வன் தமிழன் ; தனக்கென வாழாதவன் தமிழன் ; பிறர்க்கென வாழ்பவன் தமிழன். பிறர்க்கு ஈவோர் தமக்கு ஈவோர் என்று அறிபவன் தமிழன். பிறர்வருத்தம் காணப் பொருதவன் தமிழன். அதனுல், தான் வருந்திப் பிறரை வாழ்விப்பவன் தமிழன். 'பழுமரம்போல், பல்லோர் பயன் துய்ப்பத் தான் வருந்தி' வாழும் நல்லாண்மகன் தமிழன்.

பிறர்குற்றத்தைத் தன் குற்றமாக ஏற்றுக்கொள்ப-வன் தமிழன். பிறருடைய குற்றம் ஒன்றனையும் கூருமல், அவர்குணங்களையே பலர் அறியக் கூறுபவன் தமிழன். தீமைசெய்வோர்க்கும் நன்மைசெய்பவனே தமிழன். பகைவனுக்கும் அருள்பவன் தமிழன். செய்நன்றிமற-வாதவன் தமிழன். ஒருவர் ஓராயிரம் தீமை செய்யினும், அவர் செய்த நன்மை ஒன்று உண்டாயின், அதனையே எண்ணி, அத் தீமையனைத்தையும் மறப்பவன் தமிழன்.

'எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறு'; ஆகலின், **வாழ்வு சிறிது மானமே பெரிது** என்று மதிப்பவன் தமிழன். புலியும் கவரிமாவும் போல, முயற்சியும் மானமும் உடைய-வன் தமிழன். எலிபோலத் திருட்டுவாழ்வு வாழாதவன் தமிழன்.

மறுமை நோக்காமல் வறுமையே நோக்கும் வண்மை உடையவன் தமிழன். இல்லையென்பார்க்கு இல்லை என்-ஞுதவன் தமிழன். தலைக்கொடை கொடுத்தவன் தமிழன். புலவர், பொருநர், கலைஞர், பரிசிலர் ஆதியோர்க்கு அடை-யாத வாயிலை உடையவன் தமிழன். முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும் உதவிக் **கொடைமடம்பட்டவன்** தமி-ழன். இரத்தல் இழிந்தது ; ஈயாமை அதைவிட இழிந்தது ; கொடுத்தல் உயர்ந்தது; கொள்ளாமை அதைவிட உயர்ந்தது —என்னும் அரும்பொருளை அறிவித்தவன் தமிழன்.

ஊழின் வலியை உணர்ந்தவன் தமிழன். '**கேடும் பெருக்கமும் இல்லல்ல**'; '**தீதும் நன்றும் பிறர்தர வாரா**' — என்னுந் தொடர்களால், தீமையும் நன்மையும் வறுமையும் செல்வ-மும் முற்பிறப்பின் செயலால் அமைந்து கிடந்தவை என்ப-தனை உணர்த்தியவன் தமிழன். ஆகலின், 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்னும் பரந்த மனப்பான்மை உடையவன் தமிழன்.

உயர்ந்த உள்ளம், உரை, செயல் இவற்றை உடையவன் தமிழன்.

வீரத்தொடு விளங்கி, படைமடம்படாதவன் தமிழன். கண்ணுக்கு அழகன் தமிழன்; அதனினும், செவிக்கு அழகனாய் இருப்பவன் தமிழன். பசு, பத்தினிப்பெண்டிர், பிணியுடையோர், மக்கட்பேறில்லோர் முதலியோர் காவலிடம் அடைந்தபின்னரே போர்தொடங்குபவன் தமிழன். புறங்காட்டியோடுபவருக்குத் தீங்கொன்றும் புரியாதவன் தமிழன். மறத்திலும் அறத்தைப் போற்றுபவன் தமிழன்.

அன்பே கடவுள் என்று அறிந்தவன் தமிழன். அன்பே வாழ்வில் வெற்றி அளிக்குங் கருவி என்று அறிந்து கடைப்பிடிப்பவன் தமிழன். 'வேண்டும் வேண்டும்...மிக்க அன்பு மேவுதலே' — என்று மீண்டும் மீண்டும் ஆண்டவனை வேண்டுகின்றார் மணிவாசகர்; 'அன்பிலாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே!' என்பதும் அவருடைய மணிமொழி.

கல்விக்கு முடிந்த பயன் கடவுளைக் கண்டு களித்து பிறப்பை அறுத்து, பேரின்பம் துய்ப்பது என்பதனை எழுதி வெளியிட்டவன் தமிழன். கடவுளைக் கண்டவன் தமிழன்.

ஏழையுயிருக்குச் செய்யுந் தொண்டே ஏற்றம் பொருந்திய கடவுட்டொண்டு என்று தெளிந்தவன் தமிழன்.

2. பழந்தமிழன் செய்த பெருந்தவறு

பழந்தமிழன் செய்த செயற்கருஞ்செயலை நாம் புகழ்தல் வேண்டும்; நாமும் அவற்றைக் கொள்ளல் வேண்டும். அவன் செய்த தகாத செயல்களை, தவறுகளைப் பழித்தல் வேண்டும்; நாம் அவற்றைத் தள்ளல்வேண்டும். காய்தல் உவத்தல் இன்றி, எல்லாவற்றையும் நடுநிலையில் நின்று நன்கு ஆராய்ந்து, நல்லவற்றைக் கொள்ளுவதும், அல்லவற்றைத் தள்ளுவதும் அறிஞருடைய கடமை ஆகும். ஒருவர்மேல் உள்ள வெறுப்பின் காரணமாக அவர்குணங்களைக் குற்றங்களாகவும், வேறொருவர்மேல் உள்ள விருப்பின் காரணமாக அவர்குற்றங்களைக் குணங்களாகவும் மாற்றிக் கூறுதல் தூற்றத்தகுவதே ஆகும். தவறுகளைச்

செய்தோர் நம் முன்னோர் என்னும் காரணத்தினால், அவற்றை மறைப்பதையும் மாற்றுவதையும் உலகம் ஏற்றுக்கொள்ளாது. உள்ளதை உள்ளவாறு உணர்ந்து, உணர்ந்தவாறே உலகத்துக்கு உணர்த்துவதே உயர்ந்தோரது செயல். அதுவே அறநெறி.

பழந்தமிழர் வீரம், வண்மை, கல்வி, செல்வம், ஒழுக்கம் முதலிய அனைத்தினும் ஒப்புயர்வற்று விளங்கினர் என்பது உறுதி. ஆயினும், 'பண்டைத்தமிழர் அனைவரும் குணக்குன்று, ஒழுக்கக்கடல்; குணமே நிறைந்தவர்; குறையும் குற்றமும் இல்லாதவர்' – என்று இயம்ப முடியாது.

தமிழர் செய்த தவறுகளும் சில உள என்பதற்குப் பண்டைச் சான்றோருடைய செய்யுட்களே தக்க சான்று. அவை மறுக்கப்படாதவை; மறைக்க இயலாதவை.

பழமைக்குப் பெருமை உண்டு; பழம்பொருளுக்கும் பெருமை உண்டு. ஆயின், 'பழமை என்பது குணமே நிறைந்தது; குறையும் குற்றமும் இல்லாதது. புதுமை என்பது குணமே இல்லாதது; குறையும் குற்றமுமே நிறைந்தது' – என்று கூறுதல் பொருந்தாது. பழமையிலும் குணமும் குற்றமும் காண்கின்றோம்; புதுமையிலும் குணமும் குற்றமும் காண்கின்றோம். ஆகலின், 'பழமையோ பெருமைக்கே பிறப்பிடம்; புதுமையோ சிறுமைக்கே புகலிடம்' – என்பது ஆராய்ச்சிக்கு அமையாத கருத்து.

பழந்தமிழர் அறிந்தோ அறியாமலோ இழைத்த பிழைகளை நாம் அறிந்து விலக்குதல் இன்றியமையாததே ஆகும். நம்மவரது குற்றத்தை நமக்குள் நாம் கூறிக்கொள்ளல் வேண்டும்; நாம் திருந்தவேண்டும்.

நம் தமிழ்நாட்டில் ஆண்ட **சேரன் சோழன் பாண்டியன்** இம்மூவரும் முடிசூடிய மன்னவராவர். ஆயின், இந்நாட்டுச் சிற்றரசர் முடிஅணிந்திலர். தமிழ்ச்சிற்றரசனும் வள்ளலும் ஆகிய காரி ஒருவனே முடி அணிந்ததாகக் காண்கின்றோம். அதனால், அவனுக்குத் 'திருமுடிக்காரி' என்னும் பெயர் வழங்கிவந்தது.

தமிழ்வள்ளல்கள் எழுவர் ஆவர். அவர் **பாரி, ஓரி, காரி, அதிகமான்அஞ்சி, பேகன், ஆய்அண்டிரன், நள்ளி** என்பவர் ஆவர். அவர்கள் சிற்றரசர்களாய்த் தமிழ்நாட்டில் சிறு-

சிறு பகுதிகளை ஆண்டு, ஆங்காங்கு வீரம் வண்மை கல்வி முதலியவற்றால் பெரும்புகழ்பெற்று விளங்கினர்.

இம்முடிமன்னரும் சிற்றரசரும் ஒற்றுமையோடு வாழ்ந்திருந்தால், நம் தமிழ்நாடு எத்துணை ஏற்றமும் தோற்றமும் பெற்று விளங்கும்? ஒற்றுமை இல்லாமையினாலே தமிழ்நாடு பிறருக்கு அடிமைப்பட்டு இழிநிலையை அடைந்தது என்பது வெள்ளிடைமலை. தமிழனொருவன் மற்றொரு தமிழனைக் கொன்று தருக்கி வாழ்ந்தான்; பின்னர் அவனும் தாழ்ந்து, பிறர்க்கு அடிமை ஆயினான்; அனைவரும் அடிமை ஆயினர்.

சேரன், சோழன், பாண்டியன் என்பன தமிழ்க்குடிப்பெயர்கள். இம் முக்குடியும் தமிழ்ப்பழங்குடி; "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே, முன் தோன்றி மூத்த குடி." தமிழராகிய முடிமன்னர் மூவரும் தம்முள் மாறுபட்டுப் பொருது ஒருவரை ஒருவர் கொன்றனர். நம் தமிழ்நாட்டில் ஒருகுடியில் பிறந்தாருள் பிளவும் பிணக்கும், பொறாமையும் போரும், கொள்ளையும் கொலையும் விளைவதா? பாண்டியன் சோழனுக்குப் பகைவனாம்! சோழன் சேரனுக்குப் பகைவனாம்! இதனை எண்ணும்பொழுது என் நெஞ்சு பொறுக்கவில்லையே!

3. புலவர் பலர் ஆற்றிய பெருந்தொண்டு

பழந்தமிழ்ப்புலவர் பரிசில்வாழ்க்கை நடத்தியவராயினும், அரசர் முதலாயினாரிடம் காணப்பட்ட குறைகளை அவ்வப்போது நேர் நின்று எடுத்துரைத்து, அவர்களைத் திருத்த முயன்றனர். செல்வமும் வலிமையும் செல்வாக்கும் ஒருங்கமைந்த மன்னவரிடம் ஒரோவழிக் குற்றம் நிகழ்தல் இயல்பே. நெறிகடந்து செல்லும் வளம் மிக்க பெருங்களிற்றைப் பாகன் அடக்கி நெறியறிந்து செலுத்துதல்போல, பலவகை வளம் மிக்க வேந்தர் ஒரோவழி அரசியல்நெறி கடந்துசெல்லும்பொழுது, புலவர் அவர்களுக்குத் தக்க அறவுரையும் அறிவுரையும் எடுத்துரைத்து, அன்னாரை நன்னெறியில் செலுத்த முயன்றுள்ளனர்; மன்னர் தம்மிடம் வைத்த நன்மதிப்பினை நன்கு பயன்படுத்தி, போர்க்களங்களிலும் அறவுரைகூறி, போரைத் தடுத்தனர்.

இச் செய்திகளை முடமோசியார், கோவூர்கிழார், ஆலத்தூர்கிழார், புல்லாற்றூர் எயிற்றியனார், ஔவையார், அரிசில்கிழார் முதலியோருடைய செயல்களால் அறியலாம்.

தொண்டைமான் தன் படைச்செருக்கால் வள்ளல் அதியமானோடு போர்செய்ய எண்ணியிருந்தான். அதனை அறிந்த அதியமான், 'போர் விளையின் படைவலிமையில் குறைந்த தொண்டைமான் இறக்கவும் நேருமே; உயிர்களும் பல அழிந்தொழியுமே' என்று உள்ளம் இரங்கி, அப் போர் நிகழாமல் தடுக்க ஔவையாரைத் தொண்டைமானிடம் தூதுவிட்டான்.

ஔவையார் அங்குச் சென்றார்; தொண்டைமான் காட்டிய படைக்கலக்கொட்டிலைக் கண்டார். "இப் படைக்கலங்கள் பீலி அணியப்பெற்று, மாலைசூட்டப்பட்டு, நெய் பூசப்பெற்று, அழகாய் அரண்மனையில் வைக்கப்பட்டிருக்கின்றன! ஆயின், அதிகமானுடைய படைக்கலங்களோ கங்கும் நுனியும் முரிந்து, அழகிழந்து, எந்நாளும் கொல்லனுடைய பணிக்களரியாகிய சிறுகொட்டிலில் இருக்கின்றன"—என்று அதிகமானஞ்சியின் படைக்கலங்களைப் பழிப்பதுபோல் புகழ்ந்து, அதிகன் தொண்டைமானினும் அதிக வலிமையுடையவன் என்பதனைக் குறிப்பால் கூறினார்.

தொண்டைமானும் நல்வினைப்பயனால் தன் குறையை உணர்ந்து, அதியமானோடு செய்ய எண்ணியிருந்த போரைத் தவிர்த்தான்; ஒற்றுமையோடு வாழ்ந்தான். இது ஔவையார் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய பெருந்தொண்டன்றோ! புலவர் பிறரும் அவ்வாறு செய்துள்ளனர்.

4. புலவர் சிலர் செய்த பெரும்பிழை

புலவர் சிலர் தம்மைப் புரந்த புரவலரைப் போற்றும் முறையால் சில பிழைகளை அறியாமல் செய்தனர்போலும்! இதற்கு ஒரு சான்று கூறுவோம்:

சோழன் நலங்கிள்ளியும், சோழன் நெடுங்கிள்ளியும் தாயத்தார்கள். ஆயினும், அவர்களிடையே பகைமை பிறந்தது. நலங்கிள்ளி நெடுங்கிள்ளி இருந்த உறையூரை முற்றுகையிட்டான்.

புலவர் கோவூர்கிழார் அதனை அறிந்து, மன்னவர்-பகைமையை ஒழித்து, முற்றுகையை அகற்றி, மக்கள்-துன்பத்தையும் ஒழிக்க எண்ணினார்; நலங்கிள்ளியிடம் சென்று அவன்மனம் கொள்ளுமாறு, சில சீரிய கருத்துக்-களை எடுத்துரைத்தார்.

"நலங்கிள்ளி, உன்னால் வளைக்கப்பட்டு உள்ளிருப்-பவன் உன்னைப்போல் ஆத்திப்பூமாலை அணிந்தவனே; நீ பிறந்த சோழர்குடியில் பிறந்தவனே. இருவிருள் எவர் தோற்பினும் பிறரால் பழிக்கப்படுவது சோழர்குடியே ஆகும். இப் போர் உன் குடிப்பெருமைக்கு ஏற்றதன்று. ஆகலின், இதனைக் கைவிடுக"—என்றார் புலவர்.

அதுகேட்ட நலங்கிள்ளி புலவர்சொற்களை மறுக்க இயலாதவனாகி, போரை நிறுத்தினான். புலவரின் இத் தொண்டு புகழ்தற்கு உரியதே.

ஆயினும், அவர் பின்வருஞ் செய்தியைக் கூறுதிருப் பின், அவரைக் குற்றங்கூற முடியாது. அக்காலத்தில் சேர-ரும், பாண்டியரும், சோழரும் அடிக்கடி ஒருவரோடொரு-வர் பகைமையுற்றுப் போர்புரிந்தனராதலின், அம்மூவருள் ஒருவர்க்கு ஏனையோர் எதிரிகளாகக் கருதப்பட்டனர்! வேந்தனொருவன்குடியில் உட்கலகம் விளைந்தால், வேந்தர் பிறர் அதனைக் கண்டு மகிழ்வர்! ஆதலின், புலவர் கோவூர் கிழார் நலங்கிள்ளியை நோக்கி, "நின்னால் வளைக்கப்பட்டு உள்ளிருப்பவன் பாண்டியனுமல்லன்; சேரனுமல்லன்" என்றார். "**பாண்டியனும் சேரனும் உனக்குப் பகைவராவர். உள்ளிருப் பவன் அவர்களுள் ஒருவனாயின், நீ போருக்கு எழுந்து வளைத்துக்-கொள்ளுதல் முறைமை ஆகும்**"—என்பது குறிப்பால் தோன்றக் கூறுவாராயினார்.

தமிழ்வேந்தர் ஒருவரையொருவர் பகைவராகக் கரு-திப் பொருதனராயினும், புலவர் தம் சொல்லால் இவ்வாறு இயம்பாமல் இருப்பதே அவர் கடமையன்றோ.

அக் குறிப்புப்பொருளைத் தரும் அடிகள் பின்வருவன ஆகும்:

இரும்பனை வெண்டோடு மலைந்தோன் அல்லன்
கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்

புலவர் சிலர் இவ்வாறு கூறியதனால், புறத்தின் உரையாசிரியரும் அவரைப் பின்பற்றி ஓரிடத்தில் **சோழனுக்குப் பகைவர் சேரபாண்டியர்** என்றே உரைவகுத்துள்ளார். தன் மைந்தர் இருவரோடு போர்புரிதற்கு எதிர்த்துநின்ற கோப்பெருஞ்சோழனுக்கு அறவுரை கூறிப் போரை விலக்கிய புல்லாற்றூர் எயிற்றியனார் பின்வருமாறு கூறினார் :

> **நின் தலைவந்த இருவரை நினைப்பின்**
> **தொன்று உறை துப்பின் நின் பகைவரும் அல்லர்.**

இவ்வடிகளுக்குப் **புறநானூற்று உரையாசிரியர்**, " நின் இடத்துப் போர்செய்யவந்த இருவரையும் கருதின், பழையதாய்த் தங்கப்பட்ட வலியையுடைய **நின் பகைவேந்தராகிய சேரபாண்டியரும்** அல்லர் " என்று உரை எழுதியிருப்பதைக் காண்க.

இவைபோன்ற புலவர்சொற்களால் தமிழ்வேந்தரின் பகைத்தீ, நெய் பெய்த நெருப்புப்போல, மேலும் கொழுந்துவிட்டு எரிந்தது போலும்!

5. புலவர் சிலர் கண்ட அரிய காட்சி !

அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி ' என்னும் பழமொழி பொருள் நிறைந்த மொழி. மன்னரிடையே ஒற்றுமை இல்லையாயின், அவர்நாட்டுமக்களிடையே ஒற்றுமை காண்பது எவ்வாறு ?

தமிழ்மூவேந்தரிடை ஒற்றுமை இல்லையே என்று பழம்**புலவர்களின் உள்ளமும் ஏங்கியது** என்பதனைப் பழம்பாட்டுக்கள் நன்கு புலப்படுத்தும். ஒருமுறை முடிமன்னர் மூவரும் ஒன்றுபட்டு ஓரிடத்துத் தங்கியிருந்த காட்சி **ஔவையாருக்கே** பெருவியப்பினை அளித்துள்ளது.

சேரமான் மாரிவெண்கோ, பாண்டியன் உக்கிரப்பெருவழுதி, சோழன் பெருநற்கிள்ளி இம்மூவரும் ஒருங்கு இருந்தனர். அக் காட்சியைக் கண்டார் ஔவையார்; அகமகிழ்ந்தார்; வியந்தார்; 'வேந்தீர், உங்கள் ஒற்றுமைக்காட்சி என் உள்ளத்துக்கு உவப்பினை அளிக்கின்றது. என் கண்கள் கண்டு களிக்கும்படி, அந்தணர் வேள்விச்சாலையில் அமைத்துள்ள முத்தீப்போல, மூவிரும் ஒன்றுபட்டு

ஒருங்கு வீற்றிருக்கின்றீர்களே! நும் நாள் விண்மீனினும், வான்துளியினும் உயர்ந்து மேலாகத் தோன்றிப் பொலிக' —என்று வாயார வாழ்த்தினர்.

கடைச்சங்ககாலத்திலும் நற்றமிழ்நாட்டுக் கொற்றவரின் ஒற்றுமையைக் கலைத்து, அவர்கள்வாழ்வையும் அந் நாட்டுமக்களுடைய வாழ்வையும் குலைத்து, களிப்புக் கொள்வதே தம் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்ட நயவஞ்சக நரிகள் இருந்த செய்தி புலவர் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனர் பாடிய புறப்பாட்டினுல் நன்கு புலனுகின்றது. மண்மகளும் அப் பூரியோரைப் பொறுப்பதே தன் பொறுமைக்குப் பெருமை என்று சுமப்பாள்போலும்!

புலவர் காரிக்கண்ணனர், சிற்றினத்தவர் சிலரால் தமிழ்மன்னவரும் தமிழ்மக்களும் தம்முள் பூசலிட்டுப் பொன்றிய செய்தியை எண்ணிஎண்ணி மனம் புண்ணுயினர். அவ்வாறு இருக்குங்காலத்து ஒருநாள் அவர் என்றும் காணுத காட்சியைக் கண்டார். அப் புதுக்காட்சி அவருக்குப் பெருவியப்பினையும், கழிபேருவகையையும் அளித்தது.

சோழன் பெருந்திருமாவளவனும் பாண்டியன் பெருவழுதியும் ஒருங்கு வீற்றிருந்ததனைப் புலவர் கண்டார்; பெருமகிழ்ச்சி கொண்டார்; பின்னர், தம் மனத்தில் மறைந்துகிடந்த மாண்புடைக் கருத்துக்களை மன்னவர்முன் வெளியிட்டார்.

"பெருந்திருமாவளவ, இந்நாள் நன்னுள்! இக்கண்கள் பெற்ற பேறே பெரும்பேறு! பலராமன் கண்ணன் என்னும் இருபெருந்தெய்வமும் ஒருங்கு இருந்தாற்போல, நீயும் பாண்டியனும் நட்புக்கொண்டு ஒருங்கு இருக்கும் இக் காட்சியினும் இனிய காட்சியும் உளதோ?

"நீயோ குளிர்ந்த நீரை உடைய காவிரிக்குத் தலைவன்; நீர்வளமும் நிலவளமும் நிரம்பிய சோழநுட்டு வேந்தன். இவனே வீர இளைஞன்; முன்னுள்ளோர் இறந்தாராயினும், தன் பழம்புகழ்க்குடியைத் தடுமாற்றமில்லாமல், வேர்அற்ற ஆலமரத்தை வீழாது தாங்கும் வீழ்துபோல, அணைத்துத் தாங்குந் தலைவன்; பாண்டியர்குடியுள் ஏறு-

போன்றவன்; பகைவராகிய பாம்பிற்கு இடியேறு போன்றவன்.

நீயோ அறம் தங்கும் உறையூரைத் தலைநகராகக் கொண்டுள்ள சோழநாட்டின் வேந்தன், இவனோ பெறுதற்கு அரிய மலைபடுபொருளாகிய சந்தனமும்,கடல்படுபொருளாகிய முத்தும் அளிக்கும் **தமிழ் பொருந்திய மதுரையைத்** தலைநகராகக் கொண்டுள்ள பாண்டியநாட்டு வேந்தன்; முரசம் மூன்றும் முழங்கும் மதுரைக்கு மன்னவன்.

"இவ்வாறு நீர்வளமும் நிலவளமும், அவற்றால் பலவகைப் பொருள்வளமும், அறமும், வீரமும், வெற்றிச்சிறப்பும் பெற்றுள்ள இருவீரும் இத்தன்மையராய் இன்றுபோல் என்றும் ஒன்றுபட்டு வாழ்க! நும்முடைய புகழ் நெடுங்காலம் செல்வதாக!

"இன்னமும் கேளுங்கள்: நும்முள் ஒருவீர் ஒருவீர்க்கு உதவுவீராக. நீவிர் இருவீரும் கூடிநிற்கும் இந்நட்புநிலையினின்று சிறிதும் வேறுபடாது வாழ்வீராக. இவ்வாறு ஒன்றுபட்டு இருப்பின், உமக்குப் பகைவர் ஒருவருமிலர். ஆகலின், இம் மண்ணுலகம் உம் கையகப்படுவது உறுதி; பொய்யாகாது.

" செந்தமிழ் வேந்தீர், இன்னமும் ஒன்று உரைக்கின்றேன்; உற்றுக் கேட்பீராக. சிறியார் சிலர் அன்பு பொருந்திய நெஞ்சை உடைய நும்மிடையே புகுந்து, நும்மைப் பிரித்தற்குக் காலம் பார்த்துச் சூழ்ந்து திரிவர். அவர்கள் வஞ்சித்து ஒழுகும் மதியிலிகள்! அவர்கள்மொழி பொதுமொழி; சிறப்பில்லாத மொழி; பொய்ம்மொழி. அம் மொழிகள் நல்லனபோல் தோன்றும்; நியாயத்தை உடையனபோல் தோன்றும்; முன்னோர் ஒழுகிய ஒழுக்கம் உடையனபோல் தோன்றும். அப் பொய்யுரையை மெய்யுரை என்று எண்ணி மயங்கி ஏமாற வேண்டா. அவர் நண்பர் ஆகார்; முகம் நகப் பேசும் அகப்பகைவரே ஆவர். அவருடைய பொய்ம்மொழியைக் கேளாதீர். அவ் வஞ்சகர் நும் செவிக்கும் நும் நெஞ்சுக்கும் இனிமையாகத் தோன்றும்படி பேசி, நும்மைப் பிரிக்க முயல்வர். அவர்சொற்களை ஆராய்ந்து தெளிந்து, அவற்றைப் புறக்கணித்து, இங்ஙனமே நீடு வாழ்க!

" நும்மிடை நட்புக் குறையாமல், மாறுமல், இன்றே போல் என்றும் இருத்தல் வேண்டும்.

" உம் வேல் உயர்க. உம் புலிக்கொடியும் மீன்கொடியும், பிறர்நாட்டுக்குன்றின் உச்சியில் விளங்குக."

இம் மொழிகள் பொன்னேட்டில் பொறித்துவைக்கவேண்டிய பொன்மொழிகள் ; முக்காலத்துக்கும் முற்றும் பொருந்தும் மெய்ம்மொழிகள் :

" நல்ல போலவும், நயவ போலவும்
தொல்லோர் சென்ற நெறிய போலவும்
காதல் நெஞ்சின் நும்மிடை புகற்கு அலமரும்
ஏதில் மாக்கள் பொதுமொழி கொள்ளாது
இன்றே போல்க நும் புணர்ச்சி "

[நயவ - நியாயத்தை உடையன. தொல்லோர்–பழையோர். நெறி–ஒழுக்கம். காதல்–அன்பு. அலமரும்–சுழலும். ஏதுஇல்மாக்கள்–அயலார். பொதுமொழி–சிறப்பு இல்லாத மொழி. புணர்ச்சி–நட்பு.]

புலவருடைய இவ் வறிவுரையின் பொருளைத் தமிழர் அனைவரும் எண்ணி எண்ணி உணரவேண்டும். பிளவுபட்டுச் சிதறிப் பகைமைக்கடலில் மூழ்கிக் கிடக்கும் நம் தமிழ்நாட்டிற்கு இன்று வேண்டிய தலையாய அறிவுரை இதுவேயாகும். இது பொருள் நிறைந்த மொழி. தமிழரின் நல்வாழ்வினைக்குறித்து புலவர்உள்ளத்திலிருந்து பிறந்த உலகியல்அறிவுரை. என்றும் தமிழன் தலைவணங்கிப் பாராட்ட வேண்டிய தலைசிறந்த தமிழ்ப்பெரும்புலவர், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனாரும் ஔவையாரும் போன்றவரே ஆவர்.

தமிழர் சிலர் நூலறிவும், நுண்ணறிவும், உலகியல்அறிவும், பகுத்தறிவும் போதாதவர், ஆயின், அவர் பளிங்கு போன்ற உள்ளம் படைத்தவர் ; எடுப்பார்கைப்பிள்ளையாய் இருப்பவர் ; எது நன்மை எது தீமை, எது மெய் எது பொய், எது வாழ்விக்கும் எது தாழ்விக்கும் என்று அறியும் ஆற்றல் குறைந்தவர் ; ஆகலின், பிறர்பொய்யை மெய் என்று கொண்டு மயங்குபவர். தம் நலத்தையே கருதுஞ் சிறியார் சிலர் நச்சுச்சொற்களைப் பேசி, இவ்வேழைத்தமிழர்மனத்தை மாற்றி, தமிழினத்தில் வேற்றுமை-

விதையை விதைக்கின்றனர். அவர்கள் மனம் வேறு சொல் வேருய் வாழும் முழுமக்கள். அவர்கள்மொழி பொது-மொழி; நல்லபோலவும், நயவபோலவும், தொல்லோர் சென்ற நெறிய போலவும் தோன்றும் மொழிகள்.

தமிழினத்தில் காணப்படும் பல வகுப்பினருள் ஒரு-வகுப்பினரோடு மற்ருெரு வகுப்பினரை முட்டவிட்டு, இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிச் சண்டை-மூட்டி, தமிழ்நாட்டைப் பாழ்படுத்தும் இக்கூட்டத்தாரிட-மிருந்து, தமிழன்பர்காள், உங்களைக் காத்துக்கொள்க. பாலைநிலத்தில் கானல்தேரைக் கண்டு, அது நீர்நிலை என்று கருதி மயங்கி, ஓடிஓடி நீரைக் காணுது களைத்து வருந்தும் கலைமானைப்போல, திரிபுணர்ச்சியினுல் கலங்கித் திரியா-தீர்கள்.

6. பழங்காலத்தமிழர்கொலை

சொன்னுல் விரோதம்; ஆயினும் சொல்லுவேன்; கேளுங்கள். புண்ணைக் கீறி ஆற்றவேண்டும்; பொதிந்து மூடுவது பின்னர்ப் புரையோடி உயிருக்கே உலைவைக்கும்.

சோழன் நலங்கிள்ளி, தன் மரபினனும் தாயத்தவனு-மாகிய நெடுங்கிள்ளி தங்கியிருந்த ஆவூரையும் உறையூரை-யும் முற்றுகையிட்டு, அவனையும் அவ்வூர்மக்களையும் துன்புறுத்தினுன். புலவர் கோவூர்கிழார் கூறிய அறி-வுரையால் நலங்கிள்ளி போரை நிறுத்தினுன்.

ஆயினும், தாயாதியோடு ஒன்றிவாழ விரும்பாத அந் நலங்கிள்ளி 'காரியாறு' என்னும் இடத்தில் நெடுங்கிள்ளி-யோடு பொருது அவனைக் கொன்ருன்.

கோப்பெருஞ்சோழன் ஆட்சித்திறன், வீரம், கொடை, நற்குணம் இவற்ருல் சிறந்து விளங்கிய தமிழ்மன்ன-வன்; அன்றியும், சிறந்த நட்பிற்கே எடுத்துக்காட்டாய் விளங்குபவன். அவனுக்குத் தீவினைப்பயனுல் அறிவில் குறைந்த புதல்வர் இருவர் இருந்தனர். அம் மைந்தர் தம் தந்தை-யிடம் பகைமைகொண்டு, படையொடு சென்று, அவனோடு போர்புரியவும் போந்து நின்றனர். அத் தந்தையும் தன் மைந்தரோடு போர்புரியப் படையோடு போந்து நின்ருன்.

தந்தையும் மைந்தரும் தம்முள் பகைத்துப் போர்புரிதலி-னும் கொடிய செயல் உலகில் உண்டோ! புல்லாற்றூர் எயிற்றியனுர் புகன்ற அறவுரையைக் கேட்டுப் போரை நிறுத்திய கோப்பெருஞ்சோழன் பின்னர் உயிர்வாழ்ந்-திருக்க விரும்பாமல்(வடக்கிருந்து) பட்டினியிருந்து உயிர்-துறந்தான்.

சேரன் சோழன் உள்ளிட்ட எழுவர் ஒன்றுசேர்ந்து இளைஞன் பாண்டியன் நெடுஞ்செழியனோடு பொருதனர்; ஆயினும், தோற்றேடினர்.

அச் செழியன் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையைப் பிணித்துச் சிறையிட்டான்.

சோழன் கிள்ளிவளவன் சேரனொருவன் ஒடுங்கியிருந்த கருவூரை முற்றுகையிட்டான்!

தமிழ்வள்ளல்களுள் பலர் தம்முள் மாறுபட்டுப் பொருதனர்; மடிந்தனர். சிலர் முடிமன்னரோடு பொருது வென்றனர்; சிலர் மாய்ந்தனர்!

தமிழ்முடிமன்னர் தமிழ்வள்ளல்கள்சிலரை வென்று, கொன்று களித்தனர்!

தமிழ்வள்ளல் திருக்கோவலூர் மலையமான் திருமுடிக்காரி வீரம், கொடை இரண்டிலும் சிறந்து விளங்கியவன். முடிமன்னர், குறுநிலமன்னர் யாவரும் தனித்தனியே தம் படைகொண்டு அவனை எதிர்த்துப் பொர அஞ்சினர்.

அவனுடைய துணையைப் பெற்ற மன்னரே போரில் வெற்றிபெற்றனர். அவன்துணையைப் பெற்று வெற்றி-பெற்ற மன்னவனும் அவனைப் புகழ்வான்; அவனைத் துணையாகப் பெறுமையால் வெற்றிபெறாத மன்னவனும் அவனைப் புகழ்வான். அவனுடைய வீரச்சிறப்பினைக் கண்டு அனைவரும் அவனிடத்துப் பகைமைகொண்டனர்.

தமிழ்வள்ளல்களுள் ஒருவனுகிய அக் காரி மற்றொரு தமிழ்வள்ளலாகிய வல்வில்ஓரியைப் போரில் கொன்று, அவனுடைய கொல்லிமலையைச் சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறைக்கு உரிமை ஆக்கினுன்.

காரி கொல்லிமலையைச் சேரனுக்குக் கொடுத்த செயல் மன்னவர்மற்றவருக்குச் சினத்தையும்,பகைமையை-

யும் உண்டாக்கிவிட்டது. ஆகலின், சோழன் குளமுற்றத்-துத் துஞ்சிய கிள்ளி வளவனும்,வள்ளல் அதிகமான் நெடுமான் அஞ்சியும் ஒன்றுசேர்ந்து காரியொடு பொருது அவனை அழித்தனர்.

அச் சோழன் காரிவள்ளலைக் கொன்றும் சினத்தீத் தணியப் பெருதவனாய், அவன்மக்களையும் யானைக்காலில் இட்டுக் கொல்விக்கத் துணிந்தான். பகைமை அறிவையும் அழித்-தது. என்னே பகைமையின் கொடுமை!

புலவர் கோவூர்கிழார் அப் பாவச்செயல் நிகழாது தடுத்தார்.

தன் நண்பன் காரியை அதிகமான் கொன்றான் என்று கேள்வியுற்ற பெருஞ்சேரல் இரும்பொறை மிக வருந்தினான்; பழிக்குப் பழி வாங்க எண்ணி, அதிகமானுடைய தகடூரை முற்றுகையிட்டான்; சோழபாண்டியரைத் துணையாகப் பெற்றுத் தன்னோடு போர்புரிய வந்த அதிகமானைப் போரில் எதிர்த்துக் கொன்றான்; சோழனையும் கொன்றான்; அவன்-நாட்டையும் கைப்பற்றினான்; தகடூரை அழித்தான்.

சேரமான் நெடுஞ்சேரலாதனும் சோழன் பெருவிறற்-கிள்ளியும் தம்முள் பொருது, இருவரும் களத்தில் வீழ்ந்து இறந்தனர்!

சோழன் கரிகாற்பெருவளத்தான் சேரமான் பெருஞ்-சேரலாதனோடு பொருதபொழுது, அச் சோழன் விடுத்த படை சேரன்மார்பினைத் துளைத்துக்கொண்டு ஊடுருவிச் சென்றது. அப் புண் விழுப்புண்ணே ஆயினும், அச் சேரலாதன் அப் புறப்புண்ணல்லாத புறப்புண்ணுக்கு நாணி, வடக்கிருந்து உயிர்நீத்தான்.

சோழன் செங்கணான் சேரமான் கணைக்கால்இரும்-பொறையைப் போரில் எதிர்த்துப் பற்றிச் சிறையிட்டான். அச் சேரன், சிறையில் காலந்தாழ்த்துப் பெற்ற தண்-ணீரைப் பருகாமல், நீர்வேட்கையோடு உயிர்நீத்தான்.

தமிழ்வேந்தர்மூவரும் தமிழ்வள்ளலாகிய பாரியின் பெரும்புகழைக் கேட்டு அத் தலைவனின் சிறப்புக்களை எண்ணி மகிழாமல், பொறாமையுற்றனர்; ஒன்றுகூடிப் போர்மேற்கொண்டனர்; பாரியை அழித்துவிட்டு அவன்-நாட்டைக் கைப்பற்ற எண்ணி, அவனுடைய பறம்பு-

மலையை முற்றுகையிட்டனர். பாரி, மலைக்குகையிலிருந்து சிங்கம் புறப்படுவதுபோல வெளிப்பட்டு, மூவேந்தரை-யும் புறங்காட்டிச் சிதறியோடச் செய்தான். ஆயினும், அம் முடிமன்னர்மூவரும் பாரிமீது பகைமை நீங்கப்-பெறாதவராய், மீண்டும் முற்றுகையிட்டு நேர்முறையில் அம் மலையைக் கொள்ளவும் அவனைக் கொல்லவும் இயலா-மல், பின்னர் ஏதோ ஒரு வஞ்சகச்செயலால் அவனை மாய்த்தனர்.

'கொடுக்கிலாதாரைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை' என்று சுந்தரரால் புகழ்ந்து பாராட்டப்-பெற்ற பாரிவள்ளலின் இம் முடிவை எண்ணி இரங்கி வருந்தாத தமிழ்மகனும் உளனோ!

தமிழன் இளங்குமணன், மண்ணாசை காரணமாக, தன் அண்ணன் குமணவள்ளலைக் காட்டுக்குத் துரத்தி, அவன்நாட்டைக் கைக்கொண்டான்; அவனைக் கொல்ல-வும் முயன்றான்; அவனுக்கு அறிவுரை கூறி அவனை நல்-வழிப்படுத்தியவர் புலவர் பெருந்தலைச்சாத்தனார்.

மேற்கூறியவற்றால் நாம் உணர்வது யாது? தமிழ்-வேந்தன் தமிழ்வேந்தனைக் கொன்றான், தமிழ்மன்னவன் தமிழ்வள்ளலைக் கொன்றான், தமிழ்வள்ளல் தமிழ்-வள்ளலைக் கொன்றான்-என்பது தெளிவு. இவ் வேற்றுமை-யாலும் பகைமையாலும் போராலும் மன்னவரும் சிற்றர-சரும் மாய்ந்தனர். கோடிக்கணக்கான ஏழைமக்களும் கொலையுண்டனர். ஆகலின், தமிழனே தமிழனைக் கொன்றான் என்பதற்குத் தட்டில்லையே!

போதும் தமிழர்கொலை! போதும், போதும்!!

இதுவரை கூறியவை ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்த செய்திகளாகும்.

7. இடைக்காலத்தமிழர்கொலை

இனி, கி. பி. மூன்றும் நூற்றாண்டுமுதல் ஒன்பதாம் நூற்றாண்டுவரை தமிழ்மன்னரும் தமிழ்மக்களும் உரிமை-யோடு வாழ்ந்ததாக உரைக்கச் சரித்திரச்சான்று ஒன்றும்

அறிய இயலவில்லை. அக்காலத்தில், களப்பிரரும், பின்னர்ப் பல்லவரும் தமிழரை ஆங்காங்கு வென்று ஆண்டுவந்தனர்.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டுக்குப் பின்னர், மீண்டும் சிறப்புற்ற பிற்காலச்சோழரும் பாண்டியருமாவது வேற்றுமையின்றி வாழ்ந்தனரா ? இல்லையே! இவர்காலத்திலும் இக் குறையையே காண்கின்றோம்.

தமிழ்நாட்டை ஒன்பதாம் நூற்றாண்டுமுதல் பதினான்காம் நூற்றாண்டுவரை ஆண்டுவந்த சோழரும் பாண்டியரும் மாறிமாறி ஒருவரைஒருவர் வென்றும் கொன்றும் தம்முள் மகிழ்ந்துவந்தனர் ! தம் தலையில் தாமே மண்ணை அள்ளிப் போட்டுக்கொண்டனர்! அதனால், அரசர்பிறரால் வெல்லப்பட்டு, மானமிழந்து, மண்ணுக்குச் சுமையாய் இருந்தனர்.

சோழன் (அரிஞ்சயன்) தலைகொண்ட கோவீர பாண்டியன் என்றும்,பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமாள் (சுந்தரசோழன்) என்றும், வீரபாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரி (ஆதித்த கரிகாலன்) என்றும், பாண்டியரும் சோழரும் விருதுப்பெயர்பூண்டு வீற்றிருந்தனராம்! இவை தமக்கு இசையா, வசையா என்று இவர் எண்ணியது உண்டோ ?

இஃது ஒன்றேயோ ! தாயாதிக்காய்ச்சலுக்கும் குறைவில்லை. மதுரையைத் தலைநகராகக்கொண்டு ஆண்ட பராக்கிரம பாண்டியனை மனைவிமக்களோடு கொன்று மகிழ்ந்தவன், திருநெல்வேலியைத் தலைநகராகக்கொண்டு ஆண்ட குலசேகர பாண்டியன் !

இன்னும் கூறுகின்றேன், கேளுங்கள்: கி.பி.1310-இல், மாறவர்மன் குலசேகரபாண்டியன் தன் காதற்கிழத்தியின் மகன் வீரபாண்டியனுக்கு இளவரசுப்பட்டம் கட்டினான். அதனால், அக் குலசேகரனுக்குப் பட்டத்தரசியின் மகன் சுந்தரன் வெகுண்டு, அறிவிழந்து, தன் தந்தையைக் கொன்று, மதுரையில் அரியணை ஏறி வீற்றிருந்தானும்! இவன் முகலாயமன்னவன் ஔரங்கசீப்புக்கு வழிகாட்டியவன்போலும் !

ஒன்பதாம் நூற்றாண்டுவரை காஞ்சீபுரத்தைத் தலைநகராகக்கொண்டு அரசுசெலுத்திய பல்லவர் தமிழ்-

நாட்டில் புகுந்து அதனைத்தம் ஆட்சியின்கீழ்க் கொணர்ந்து. தமிழரைத் தாழ்த்தித் துன்புறுத்தியதற்குக் காரணம், அக்காலச் சோழரும் பாண்டியரும் தம்முள் பகைவராயிருந்ததேயாகும். அவர்கள் ஒன்றுபட்டு இருப்பின், தமிழ்நாட்டின் வரலாறே மாறியிருக்குமன்றோ? எருதுகள் மூன்றும் ஒன்றுபட்டு இருந்தவரை, அவற்றின் அருகில் செல்லச் சிங்கமும் அஞ்சிற்று அன்றோ? ஒன்றுபட்ட தமிழரை எதிர்க்க எவரே துணிவர்?

அக்காலத்தில் தமிழ்நாட்டில் அமைதியே இல்லை என்னலாம். பல்லவர்க்கும் சோழர்க்கும் பாண்டியர்க்கும் போர் நிகழ்ந்தவண்ணமாகவே இருந்ததை வரலாறு நன்கு விளக்குகின்றது.

சேரசோழபாண்டியர் பேராண்மையும் பெருவீரமும் பெற்ற பெருவேந்தராயினும், தமிழ்நாடு தாழ்வுற்று, பல்லவர்க்கும் மகம்மதியர்க்கும் தெலுங்கர்க்கும் நாயக்கர்க்கும் மஹாராஷ்டிரர்க்கும் இறுதியில் வெள்ளையருக்கும் அடிமையாகி அல்லல் உற்றதற்கு முதற்காரணம் தமிழ்முடிமன்னர் மூவரிடையேயும், தமிழ்மும்மண்டலமக்களிடையேயும் ஒற்றுமையில்லாமையே என்பது ஒருதலை.

அந்தோ! ஒருகாலத்தில் தஞ்சைத்தமிழர் மதுரைத்தமிழரை வென்று கொன்றனர். மற்றொருகாலத்தில் மதுரைத்தமிழர் தஞ்சைத்தமிழரை மாய்த்தனர். வேறொருகாலத்தில் மதுரைத்தமிழர் திருநெல்வேலித்தமிழரை அழித்தனர். பின்னொருகாலத்தில் திருநெல்வேலித்தமிழர் மதுரைத்தமிழரை மாய்த்தனர். இவ்வாறு தமிழர் தாமே பிரிந்தும் பிறரால் பிரிக்கப்பட்டும் தம்முள் பகைகொண்டு, ஒரேநாட்டினர் ஒரேமொழியினர் என்பதனையும் மறந்து, மாய்த்துக்கொண்டனரே! இது நாட்டின் தவக்குறையே போலும்!

இக்காலத்தில் ஆராய்ச்சியறிவு பெற்ற **தமிழ்அறிஞர்** இதனை அறியாரோ? செப்பேடுகளும் கல்வெட்டுக்களும் செப்பும் இவ்வரலாற்றுண்மையை மறுப்பார் யார்? கைப்புண்ணுக்குக் கண்ணாடியும் வேண்டுமோ? இன்றும் அவ்வாறு இருத்தல் வேண்டுமோ?

இன்று இலங்கை ஆபிரிக்கா போன்ற அயல்நாடுகட்குக் கடல்கடந்து சென்று, அந் நாடுகளில் காடுகெடுத்து

நாடாக்கி, குளம்தொட்டு வளம்பெருக்கிய தமிழருக்கு, நன்றிகெட்ட அந் நாட்டினர் குடியிருக்கக் குழிநிலமும் கொடுக்க மறுத்துத் துன்புறுத்துகின்றனரே! தம் உயிரைக் கொடுத்துப் பயிர்செய்து உணவுப்பொருளை விளைவித்து உதவிய தமிழரை, அப் பிறநாட்டினர், தம் நாட்டுக்குடிகளாக ஏற்றுக்கொள்ளவும் மறுத்துத் துரத்து-கின்றனரே! கறுப்பரை வெள்ளையர் வெறுப்பதில் வியப்பில்லை. இந்தியக்கறுப்பரை இலங்கைக்கறுப்பர் வெறுப்பது வியப்பினும் வியப்பு!! நம்முள் நாம் பகைகொண்டு பட்டொழிந்தால், வயிறுவளர்க்கப் பிறநாடு சென்ற அவ்வேழைத்தமிழரை வாழ்விப்பது எவ்வாறு?

8. இக்காலத்தமிழரின் இழிநிலை

இன்று தமிழரிடையே இருக்கும் இனப்பற்றினை என் என்று எழுதுவது! அன்று, மதுரைத்தமிழனைத் தஞ்சைத்-தமிழன் மாய்த்தான்; தஞ்சைத்தமிழனை வஞ்சித்தமிழன் வஞ்சித்துக் கொன்றான். ஆயின், இன்றோ, மதுரைத்தமிழனை மதுரைத்தமிழனே மாய்க்கின்றான்! திருநெல்வேலித்தமிழனைத் திருநெல்-வேலித்தமிழனே தேய்க்கின்றான்! தஞ்சைத்தமிழனைத் தஞ்சைத்தமிழனே தாக்கி அழிக்கின்றான்! வேலூர்த்தமிழனை வேலூர்த்தமிழனே வெறுத்து வீழ்த்துகின்றான்!

இந்த இழிந்த நிலைக்கு என்ன காரணம்? நம்மிடம் இனத்-திற்கு இருக்கவேண்டிய அன்பு இல்லாமையே. அன்பு இன்றெனின், ஒருவர் செய்த சிறுகுற்றத்தையும் பெரிதாக்கிப் பலரிடம் பேசுவர்; இல்லாத குற்றத்தைப் படைத்து அவர்மீது ஏற்றிச் சொல்லுவர்; அவர்குணத்தையும் குற்றமாக மாற்றிக்கூறுவர்.

இந்நாள் அரசியல்கட்சிகள் பல புற்றீசல்போலப் பெருகிவிட்டன. அவை சாதிசமயவேற்றுமைகளை அடிப்-படையாகக் கொண்டு, தமிழொற்றுமையை மறந்து, வெறுப்பு-விதையை விதைக்கின்றன. விளைவு யாது? எங்கும் வெறுப்பு, வெகுளி, பொறாமை, பிளவு, பூசல், கொள்ளை, கொலை! க - கட்சித்-தமிழனும் கா – கட்சித்தமிழனும் ஒருவரையொருவர் காணவும் கண் கூசுகின்றது! ஒருவரை ஒருவர் அழிக்கக் காலம் பார்த்திருந்து, வாளால் வெட்டிச் சாய்க்கின்றனர்!

இதுதான் தமிழனின் இனப்பற்று ? இதுதான் தமிழன்-நாகரிகமா ? இதுதான் தமிழன்பண்பாடா ?

தமிழா, போதாதோ தமிழர்கொலை !

போதும் போதும், இனி ஒருபோதும் வேண்டா.

தமிழன் தண்டமிழை, தன் தாயை, மறந்தான் ; அன்பினைக் கைவிட்டான் ; ஒற்றுமையை இழந்தான் !

தமிழர், தாம் ஒருதாய்வயிற்றுப் பிறந்தோர் என்பதனை உணர்வராயின், அன்பும் ஒற்றுமையும் இன்றி வாழ்வரோ? அன்பு உளதாயின், ‘என் பின்னவன் பெற்ற செல்வம் யான் பெற்றதன்றோ’ என்று முன்னவன் எண்ணி மகிழானோ ! தமையன் பெற்ற பொருளும் புகழும் தான் பெற்றவையே என்று தம்பி தருக்கி மகிழ்ந்து வாழானோ ! மண், பெண், பொன், சமயம், சாதி இவை-காரணமாகப் பொறாமைகொண்டு தம்முள் அடித்துக்-கொண்டு மடிவரோ ! மாற்றானுக்கு இடம் கொடுப்பரோ ! நாட்டையும் வீட்டையும் இழந்து நலிவரோ ! வேற்றுநாடு சென்று கூலிவேலை செய்து, மானம் இழந்து வயிறு வளர்ப்-பரோ !

அன்பினை மறந்து பகைமைவிதையை விதைத்தால், பகைமையே விளையுமன்றோ ! தீமை விதைத்தால் தீமையே விளையுமே ! பொறாமைத்தீயை அன்புநீரைக் கொண்டு அணைக்கவேண்டாவோ ! வெகுளிவெள்ளத்தை அன்புக்-கரையும் அறிவுஅணையும் இட்டுத் தடுத்தலே தக்கதன்றோ ! பொறாமையும் சினமும் தம்மைக் கொண்டவனைக் கொல்வ-தோடன்றி, அவனைச் சேர்ந்தாரையும் கொன்றுவிடும் என்னுந் தமிழ்மறையைத் தமிழன் மறப்பது அறமாகாது. ஆகலின், தமிழன் ஒவ்வொருவனும் தன் இனம் (தமிழினம்) வாழவேண்டியாவது, பொறாமை சினம் இரண்டனுக்கும் இடங்கொடாமல், வேற்றுமையில் ஒற்றுமையைக் கண்டு, அன்புவழியில் சென்று, ஒவ்வொருவனும் இன்றியமையாது அடையவேண்டிய அமைதிச்செல்வத்தை அடைவானாக. பட்டம் பதவி, வீடு வாசல், தோட்டம் துரவு, இடம் பொருள் ஏவல், மனைவி மக்கள் எல்லாம் இருப்பினும், அன்பும் அமைதியும் அமையப்பெறாத வாழ்வும் ஒரு வாழ்வாமோ ? அது ஊமன் பெற்ற வேதம் ; குருடன் கொண்ட விளக்கு.

9. தமிழ்நூல்களும் சமயமும் சாதியும்

இன்று, சமயம்காரணமாகவும், சாதிகாரணமாகவும் தமிழன் வேற்றுமைப்பட்டுத் தன் வாழ்வைக் குலைத்துக்-கொள்வது அறிவுடைமை ஆகுமா ?

தமிழ்மொழியில் உள்ள ஈடற்ற இலக்கணவிலக்கிய-நூல்களை இயற்றியவரை எண்ணிப் பார்ப்போமே:

தொல்காப்பியனுர் வைதிகசமயத்தைச் சார்ந்தவர். புத்த-மித்திரனுர் (வீரசோழியவாசிரியர்) பௌத்தர். 'யாப்பருங்-கலக்காரிகை,' 'விருத்தி'க்கு ஆசிரியராகிய அமிதசாகரனுரும், 'நன்னூலு'க்கு ஆசிரியராகிய பவணந்திமுனிவரும் சைன-சமயத்தைச் சார்ந்தவர். 'இலக்கணவிளக்கம்' இயற்றிய வைத்திநாத தேசிகர் சைவசமயத்தைச் சார்ந்தவர். 'மாறனலங்கார'வாசிரியர் திருக்குருகைப்பெருமாட்கவிராயர் வைணவர். சில இலக்கணநூல்கள் இயற்றியுள்ள 'போப் போன்ருேர் கிறிஸ்தவர்.

அறிஞர் போற்றும் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்-ருகிய சிலப்பதிகாரத்தை ஆக்கிய ஆசிரியர் இளங்கோவடிகளும், மற்ருென்ருகிய சிந்தாமணியைத் திருத்தம்பெற ஆக்கிய திருத்-தக்கதேவரும் சைனர்; வேருென்ருகிய மணிமேகலையைப் பாடிய சாத்தனுர் பௌத்தர். இராமாவதாரம் என்னும் இணையற்ற இராமகதையை இயற்றிய கம்பர் வைணவர். திருத்தொண்டர்-புராணத்தைப் பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட பாடிய சேக்கிழார் சைவர். தேம்பாவணி பாடிய வீரமாமுனிவரும் இரக்ஷண்ய யாத்ரீகம் இயற்றிய புலவர் கிருஷ்ணபிள்ளையும் கிறிஸ்தவர். மஸ்-தான் சாயபு பாடல்களைப் பாடியவர் மகம்மதியர்.

பழந்தமிழ்ப்புலவருள் கோவூர்கிழார் வேளாளர்; சாத்தனுர் வணிகர்; சோழன் நல்லுருத்திரன் மன்னவன்; கபிலர் அந்தணர்; இளவெயினி குறமகள்.

பழம்பாடல்களைப் பாடிஞேரும் பாடப்பட்டோரும் ஒருமதத்தாரல்லர்; ஒருகுலத்தாரல்லர்; ஒரு சாதியா-ரல்லர்.

ஆகலின், சமயம், சாதி, நிலம், நிறம், அறிவு, ஆற்றல், உணவு, உடை முதலியவற்ருல் வேற்றுமைப்படுவோரும் ஒற்றுமை அடைதற்கு உரிய உயர்ந்த கருவி மொழியேயன்ருே.

10. சமயச்சண்டையும் மதமாற்றமும்

மதம் மதம் என்று கூறி மதம்பிடித்துக் கொலைபுரிந்து கொள்ளையடித்துத் திரியும் மக்கள் மக்கட்பிறப்பினரோ ! அவர் வடிவத்தால் மக்கள் ; வாழ்க்கையால் மாக்களே.

உலகில் உள்ள மதம்அனைத்தும் அன்புநெறியையே வகுத்துள்ளன. பிறமதத்தினரை அழித்துவிடு என்று கீதை, குர்ஆன், பைபில் முதலிய எம் மதநூலும் ஆணையிடவில்லை. மதத்தையோ மதநூலையோ குறைகூறுவதில் பயனில்லை. குறை, மதப்பேய் பிடித்தாடும் மக்களுடையதேயன்றி, மதத்தினுடையதன்று.

ஆறு ஒன்றே ; ஆயின், அதனுள் மக்கள் திளைத்துத் துளைந்து நீராடுந் துறைகள் பல. அவற்றின் பெயரும் பல. அதுபோல, ஆண்டவன் ஒருவனே ; ஆயின், அவனுடைய அருட்கடலில் திளைத்து மூழ்கும் முறைகள் பல ; அவற்றின் பெயரும் பல.

பசுக்கள் வேறுவேறு நிறத்தை உடையனவாக இருப்பினும், அவை பயந்த பால் வேறுவேறு நிறத்தை உடையது ஆகுமோ ? அப் பாலின் நிறம் வெண்மையே அன்றோ ? அதுபோல, சமயநெறிகள் பலவாயினும், அவை அடையும் அறக்கடவுள் ஒன்றே.

வண்டு தேனைப் பருகுதற்குமுன் ஒலியை எழுப்புகின்றது ; ஆயின், மலரில் தங்கிக் கள்ளை மாந்தும்போது, ஒலி சிறிதும் இல்லை. அதுபோல, கடவுளைக் கண்டு பேரின்பத்தைத் துய்க்கும் ஞானிக்குப் பேச்சு ஏது ? பிணக்கு ஏது ? அறிவிற் குறைந்தவரிடையேதான் ஆரவாரத்தைக் கேட்கின்றோம்.

பலபலசமயத்தவர் பரம்பொருளுக்குப் பலபல உருவமும் பெயரும் அமைத்து வழிபடினும், பரம்பொருள் ஒருநாமமும் ஓருருவமும் இல்லாதது என்பது எல்லாச்சமயத்தவரும் இறுதியாகக் கண்ட உண்மை.

மக்கள் உலகத்திலுள்ள பொருள் ஒன்றே என்றும், இரண்டு என்றும், மூன்று என்றும் தத்தம் அறிவுக்குத் தோற்றியவாறு தத்துவவாராய்ச்சிசெய்து முடிவுகண்டு,

முரண்பட்டு முழங்கிக் கூச்சலும் குழப்பமும் விளைக்கின்றனர் ; " என் தெய்வம் பெருந்தெய்வம், பழந்தெய்வம் ; உன் தெய்வம் சிறுதெய்வம், புதுத்தெய்வம்; அவன்தெய்வம் புன்தெய்வம். இவன்தெய்வம் செத்துப் பிறக்கின்ற தெய்வம் " என்று கூறிப் பூசலிடுகின்றனர்.

மக்கள் தத்தம் அறிவுக்கு எட்டியவகையில் அப் பரம்பொருளுக்குப் பெயரும் உருவமும் அமைத்தும், உருவம் அமைக்காமலும் அப் பொருளை வழிபடுகின்றனர். வழிபடும் நெறிகளும் பலவகைப்படுகின்றன. அந்நெறிகள் சைவம், வைணவம், சைனம், பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் முதலிய பல பெயர்களைப் பெறுகின்றன. (இறையே இல்லை என்பாருமுளர் !). கருத்துமாறுபாடு காரணமாக, அடிதடிச்சண்டையும் ஆரவாரப்பூசலும் உலகில் மலிய, மக்கள் அறிவிழந்து அல்லல் உறுகின்றனர். என்னே கொடுமை ! என்னே பேதைமை !

உணவு உடை முதலியவை உடலைப் பற்றியவை. ஆயின், மதம் (கடவுட்கொள்கை) உயிரையே பற்றியது ; உடலைப் பற்றியதன்று. உலகத்தில் உயிர்கள் தாம் வாழ, தம் உடலை வளர்க்க, தம் உடலுக்கு உறுதியைத் தேட, வேறுவேறு உணவுப்பொருள்களை உட்கொள்கின்றன. மக்கள் நாடுகளின் தட்பவெப்பநிலைக்கும், தம்தம் விருப்பத்துக்கும் ஏற்றவாறு, பலவகை உணவுப்பொருள்களை உண்கின்றனர்; பருத்தி, கம்பளி, தோல் முதலியவற்றால் ஆயின பலவகை உடைகளை உடுக்கின்றனர். ஒரு பொருள் ஒருவருக்குக் கரும்பாயும், மற்றொருவருக்கு வேம்பாயும் இருக்கின்றது. ' ஒரே உணவை உண்ணவேண்டும் ; ஒரேவகை உடையை உடுக்கவேண்டும்' என்று ஆணையிட்டு உலகினையே அடக்கி ஆள இயலுமா ? அவ்வாறு முயல்வது அறிவுடைமையாகுமா ? அம் முயற்சி பித்தன்செயலாய் முடியுமன்றோ !

அஃதேபோல, ஆறறிவு பெற்ற மக்கள் தம் உயிருக்கு உறுதிதேட, உள்ளத்துக்கு அமைதியை நாட, பிறவிப்பெருங்கடலை நீந்த, ஆண்டவன் திருவடியை அடைய, தனித்தனி, தம்தம் அறிவுக்கு ஏற்ற நெறியில் இறைவழிபாடு ஆற்றுகின்றனர். ஆயின், அனைவரும் ஒரேநெறியைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று எண்ணுவதும், தம்

நெறியையே பிறரும் பின்பற்றவேண்டும் என்று வற்புறுத்துவதும் அறிஞர்செயல் ஆகாது.

பொருள்கொடுத்து ஏமாற்றி, மதமாற்றம் செய்தலும் தகாது. மதம் விலைக்கு விற்கும் பொருளா ? விலைகொடுத்து வாங்கும் பொருளா? அன்று அன்று. அன்றியும், அச்சுறுத்தி மதம் மாற்றுவது அதனினும் கொடிது. அன்பின் விளைவே மதமன்றி, அடி, அச்சம் இவற்றின் விளைவன்று. அவ்வாறு மாற்றினும், அது நீடித்து நில்லாது. பொருளும் அச்சமும் போகின், மனமும் மதமும் மாறிவிடும்.

தமிழ்த்தாய்க்கு நிறத்தாலும் அறிவாலும் குணத்தாலும் கொள்கையாலும் தொழிலாலும் வேறுபட்ட மக்கள் பலர் உளர். அவர்கள் தாயின் உண்மைத்தன்மையை உணராமல், அதனைப்பற்றித் தமக்குள் மாறுபட்டு மண்டையை உடைத்துக்கொண்டு மடியின், அத் தாய், அவர்களின் அறியாமைக்கு இரங்கி வருந்தாளோ ? தாயின் பெற்ற வயிறுதான் கொதித்திடாதோ ! பெற்ற தாய்க்குப் பிள்ளைகள் செய்யுங் கடமையும் இதுவேயோ !

தமிழர்பலர் பெறுதற்கரிய மனிதப்பிறப்பினைப் பெற்றிருந்தும், தம் பிறப்பின் பெருமையை உணர்வதில்லை ; உயர்ந்த கொள்கையும் குறிக்கோளும் கொள்வதில்லை ; அறம் இருக்க மறத்தைச் செய்வர் ; தவம் இருக்க, அவத்தைச் செய்வர் ; இனிய கனி இருக்க, இன்னாத கனியைத் தின்பர் ; விளக்கு இருக்க, மின்மினித் தீக்காய்வர்; கரும்பு இருக்க, இரும்பினைக் கடித்து இளைப்பர்; தம்மைத்தாமே தாழ்த்திக்கொள்வர்;சார்ந்தோரையும் தாழ்த்திப் பாழாக்குவர். இம் மக்கள் மண்ணுக்குச் சுமை; நாட்டுக்குத் தொழுநோய்.

இந்துமதத்திற்குள் எத்துணைப் பிரிவு ! ஒவ்வொரு பிரிவுக்குள்ளும் எத்துணை உட்பிரிவு ! எத்துணைக் கலகம் ! இதுபோன்று இஸ்லாம் கிறிஸ்தவம் முதலிய சமயங்களிலும் எத்துணை எத்துணைப் பிரிவுகளும் உட்பிரிவுகளும் ! அவைகளுக்குள் எவ்வளவு பொறாமை! எத்துணைப் போர் ! இவற்றை உலகவரலாற்றிலிருந்து அறிகின்றோமே! இன்றும் கண்கூடாகக் காண்கின்றோமே!

தமிழரனைவர்க்கும் உள்ள பொதுமதம் எது? அது தமிழ்மதம். அம் மதத்தின்கீழ் நாம் ஒன்றுபட்டு வாழலாகாதா!

11. சாதிச்சண்டையின் தீய விளைவு

ஒரே மதத்தில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னுஞ் சாதிகள் உள. அவை ஆதியில் தனித்தனித்தொழில்பற்றித் தோன்றின; பின்னர், முறைகெட்டுத் தடுமாறிப் பூசலில் முடிந்தன. ஒவ்வொரு சாதிக்குள்ளும் ஓராயிரம் உட்பிரிவுகள்! அந்தணரில் எத்துணைப் பிரிவு! (அரசர் சாதி என்று ஒன்று இந்நாளில் இல்லை என்னலாம்). வணிகருள் எத்துணைப் பிரிவு! வேளாளருள் எத்துணைப் பிரிவு! ஐயர், ஐயங்கார், குருக்கள், ராயர், முதலியார், மூப்பனார், நாயக்கர், நாயுடு, நாடார், நாட்டார், நகரத்தார், மறவர், குறவர், படையாட்சி, உடையார், கள்ளர், கவுண்டர், செட்டியார், ரெட்டியார், பிள்ளை, கோனார், பள்ளர், பறையர்—அம்மம்ம! இவர்களுக்குள் எத்துணைச் சாதிச்சண்டை! எத்துணைக் கொலை! எவ்வளவு கொள்ளை! இவை ஒழியும் நாள், எந்நாளோ? அந்நாளே நன்னாள்.

சாதி குலம் பிறப்பு என்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும் நிலை நீங்கவேண்டும்; குறுகிய மனப்பான்மை குலைந்தோடவேண்டும்; உள்ளத்தில் உயர்ந்து உயர்ந்து ஒற்றுமை நிலவவேண்டும்; உள்ளிருளை ஓட்டும் ஒளி திகழவேண்டும். இவ்வுலகில் குற்றம் இல்லாதவர் யார்? நெல்லுக்கும் உமியுண்டு; நீருக்கும் நுரையுண்டு; புல்லிதழ் பூவிற்கும் உண்டு. குற்றம் அற்றவன் இறைவன் ஒருவனே. பிறப்பு இல் பல்பிறவிப்பெருமானாகிய அவனும், நல்லோரைக் காக்கவும் அல்லோரை அழிக்கவும் இம் மண்ணில் வந்து பிறப்பின், அவன்செயலிலும் குற்றங்காண்பர் இம்மடவுலகர். ஒருவனிடம் குணங்கள் பல நிரம்பி இருப்பினும். கீழ்மக்கள் அவனிடத்தில் உள்ள சில சிறுகுற்றங்களையே மிகைப்படுத்திக் கூறுவர். என்னே உலகவியற்கை!

பெரியோர் பிறர்பிழையைப் பொறுப்பர்; குறையைக் காணார்; காணினும் எடுத்துரையார். குற்றம் பார்க்கின்

சுற்றமும் நட்பும் இல்லை. அன்பு இல்லாதோரே குற்றத்தைக் காண்பர். அன்பு குணத்தையே காணும்.

நாட்டுமக்கள் அனைவரும் உடலின் பல உறுப்புக்கள். உறுப்புஒன்றற்கு ஊறு விளைந்தால், மற்றொன்று மகிழுமா? உறுப்பின் துன்பம் உடலின் துன்பமன்றோ? கையிலும் காலிலும் புண் இருப்பின், கழுவுவது கண்ணன்றோ? கை கண்ணைக் குத்திற்று என்றால், அக் கையைக் களைந்துவிடுவதா? ஒருவர்பொறை இருவர்நட்பு அன்றோ? தமிழரைப் பிரித்துப் பிரித்து மகிழ்வோரது மனத்தில் அமைதியும் நிலவுமோ? பழிக்கு ஆளாகும் அம் மக்கட்பதடிகள் தாமும் அமைதியை இழப்பர்; பிறர் அமைதியையும் இழப்பிப்பர்,

வாழ்வின் குறிக்கோள் அமைதி, அமைதி, அமைதி. அமைதியற்ற வாழ்வும் ஒரு வாழ்வாமோ?

12. குலத்தைக் கெடுக்குங் கோடரிக்காம்பு

இக்காலத்தில் தமிழ்ச்செய்தித்தாள்களின் ஆசிரியர் சிலர் பசுத்தோல்போர்த்த புலிகளாய்,பொதுமக்கள் சிலரின் அறிவுக்குறையைப் பயன்படுத்திக்கொண்டு, அவர்களை ஏமாற்றி,தம் நலமே கருதி, இத்தகைய சமயச்சண்டையையும், சாதிப்பூசலையும், நிலநிறவேற்றுமையையும், பகைமையையும் வளர்த்து, தாம்மட்டும் பெரும்பொருள்திரட்டிச் செல்வத்தில் திளைக்கின்றனர். தமிழரைப் பிரித்துப்பிரித்து, பகைத்தீயை மூட்டி, அதனால் படைக்கும் பொருள் என்னுவது? எத்தனை நாளைக்குப் போதும்? அழக்கொண்டவெல்லாம் அழப்போமே! இது களவினால் ஆகிய ஆக்கம் அன்றோ? இது ஆவதுபோலத் தோன்றும்; ஆயின், இறுதியில் கெடுவது உறுதி. இவர்க்குக் காசுதான் கடவுள் போலும்!

அறநெறியில் ஈட்டிய செல்வமே ஆக்கத்தை அளிக்கும். இளமையும் யாக்கையும் வளமையும் இவ்வுலகில் நிலையற்றவை என்பதனை இவர் உணராரோ? கடுங்காற்றால் முற்றிய கனியேயன்றிக் காயும் பிஞ்சும் பூவும் உதிர்தல்போல, கொடுங்கூற்றால் முதியோரே அன்றி, இளையோரும் இறப்பதை இங்குக் காண்கின்றோமே!

கூற்று, தாய் அலறப் பிள்ளையைக் கொண்டோடுகின்றதே! முற்பகல் இருந்தவர் பிற்பகல் இலர் என்பது இவ்வுலகவியற்கை. செத்தாரைச் சாவார் சுமக்கும் உலகம் இது. ஆகலின், இளமையை மூப்பு என்று உணர்தல் இனிது என்று நயம்பட உரைத்தார் பெரியோர்.

செல்வம் சகடக்கால்போல வரும். வாழ்ந்தார்கள் வாழ்ந்தே நிற்பர் என்பது இல்லையே. ஒருகுடைக்கீழ் ஆண்ட முடிமன்னரும், மனையாளை மாற்றார் கொள்ள, பெருநாடு காண, இம்மையிலே பிச்சைதாம் கொள்வர்! பின்னர், பொடிசேர் துகளாய், பிடிசாம்பராய் மாறுவர்.

இந் நிலையாமைகளைக் கண்டிருந்தும் குருடராய், கேட்டிருந்தும் செவிடராய் வாழும் இவரைப்பற்றி என் கூறுவது? மண்டையொடு மண்டையை மோதிச் சண்டையிடுஞ் செம்மறியாட்டின் தலையிலிருந்து பெருகுங் குருதியைப் பருகிப் பசிதீர்ந்து இன்புறும் நரியைப் போன்றதன்றோ, இவர்செயல்!

தமிழ்நூலாசிரியர்சிலர் இவைபோன்ற நச்சுக்கருத்துக்களைக் கொண்ட கதைகளை எழுதி வெளியிடுகின்றனர். இன்னுஞ் சிலர் இக் கருத்தடங்கிய நாடகநூல்களை இயற்றியும், அந் நாடகங்களை நடித்தும், அவற்றைத் திரைப்படத்தில் பிடித்தும் மாசற்ற மக்களின் மனத்தில் நஞ்சு ஊட்டுகின்றனர்; நாட்டையும் சீர்குலையச் செய்கின்றனர்.

வேறுசிலர் பெருங்கூட்டங்களில் தம் சொல்வன்மையினால் பொய்யையும் மெய்யாகக் காட்டி, அணுப்போன்ற வகுப்புவேற்றுமைகளை மலைபோல் பெருக்குகின்றனர்; ஒருவரையொருவர் புலிகளைப் போல் பகைத்துப் பார்த்து வாழச் செய்கின்றனர். கல் தேயும்; சொல் தேயாது. சிறுபொறி பெருந்தீயாக மாறுகிறது. நெருப்பு வைப்பது எளிது; ஆயின், அதனை அணைப்பது மிக அரிது! இவர்களால் தூண்டப்பெற்ற மக்கள் கண்ணிழந்து, அறிவிழந்து செய்யத்தகாத செயல்களைச் செய்கின்றனர். சமயவெறியும், சாதிவெறியும் பிடித்த அவர் தம்மின் மெலியாரையும், ஏழைமங்கையரையும், இளமக்களையும் வருத்துவர்; மாய்ப்பர்; மாதரைக் கற்பழித்து, வன்கண்மை செய்யவும் முற்படுவர். பின்னர், வெற்றிமுரசு கொட்டுவர்! பெருவீரர் என்று பாராட்டும் பெறுவர்!!

தமிழா, இது அறமோ? இது முறையோ? இது ஈரமோ? இது வீரமோ? இது ஆண்மைதான் ஆகுமோ?

செயற்கரிய செய்வர் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

என்னும் அளவுகோலைக்கொண்டு, தமிழர், இவருடைய பெருமைசிறுமைகளை அளந்து அறிவாராக.

மெலியாரை வலியார் வாட்டினால், இம்மையிலேயே அவ் வலியாரை அவரினும் வலியார் வாட்டுவர்; மறுமையில் தெய்வமும் வாட்டும். தொகையிலும் வலிமையிலும் வளமையிலும் குறைந்த ஒருமதத்தினரை அவற்றில் மிகுந்த மற்றொருமதத்தினர் கொன்று குவித்தால், பின்னவர், அவரினும் மிகுந்த தொகையும் வலிமையும் உடைய வேறொருமதத்தினரால் கொன்று குவிக்கப்படாரோ? அவ்வாறே மெலியோராகிய ஒருசாதியினரை, அவரினும் வலியோராகிய மற்றொருசாதியார், வருத்தி, கொன்று, மானத்தை அழித்து மகிழலாம். பின்னர், அச் சாதியார் அவரினும் வலிய மற்றொருசாதியாரால் அழிக்கப்படுவது உறுதி. இக் கொலைக்கும், கொள்ளைக்கும் எல்லையுமுண்டோ?

தமிழ்நாட்டில் உள்ள பார்ப்பனர்க்கும் அல்லாதார்க்கும் சண்டை; நாடார்க்கும் மறவர்க்கும் சண்டை; வன்னியர்க்கும் அன்னியர்க்கும் சண்டை; பிள்ளைகளுக்கும் பரதவர்க்கும் சண்டை; முதலியாருக்கும் மூப்பனுருக்கும் சண்டை; கள்ளருக்கும் பள்ளருக்கும் சண்டை—என்று இவ்வாறு பெருக்கிக்கொண்டேபோனால், இதற்கு வரம்பும் உண்டோ?

இத் தமிழறிஞர், தம் எழுத்துவன்மையையும் சொல்வன்மையையும், நல்வழியில் பயன்படுத்தலாகாதோ? இவர் தம் அறிவாற்றலால் ஆக்க வேலையில் ஈடுபடலாகாதோ? இது தமிழ்நாட்டின் தவக்குறையோ? இவர்கள், அந்தோ! 'தன்வினை தன்னைச்சுடும்' என்பதனை உணரவில்லையே! பாமரமக்களையும் பாழ்படுத்துகின்றனரே!

இவர்கள் தொடுத்து எய்யும் இந் நச்சுச்சொல்லம்புகள் மீண்டுவந்து, எய்த தம் உடலிலேயே ஊடுருவிச் சென்று, எய்த தம்மையே மாய்க்கும், அழியாத பழியை விளைக்கும் என்பதனை மறக்கின்றனரே!

கள்ளமற்ற வெள்ளையுள்ளம் படைத்த மக்களை ஏமாற்றலாம். ஆயின், படைத்த இறைவனை ஏமாற்ற முடியுமா? இறைவனே இல்லை என்பராயின், அவர் தம் நெஞ்சை ஒளித்த வஞ்சமும் உளதோ! அவர் தம் இழிந்த செயலை எண்ணி எண்ணி உள்ளமும் உடலும் நடுங்குவதன்றோ அறிவு.

> **வஞ்சித்து ஒழுகும் மதியிலிகாள், யாவரையும்**
> **வஞ்சித்தோம் என்று மகிழன்மின்;—வஞ்சித்த**
> **எங்கும்உளன் ஒருவன் காணுங்கொல் என்றுஅஞ்சி**
> **அங்கம் குலைவது அறிவு**

என்னுங் குமரகுருபரருடைய அறிவுரையை அவர் கூர்ந்து நோக்குக.

சிறுசெடியையும் வளர்த்தல் அரிது; ஆயின், வானுற ஓங்கி வளம்பெற வளர்ந்த மரத்தையும் வெட்டி வீழ்த்துதல் எளிது. சிறுவீட்டையும் கட்டுதல் அரிது; ஆயின், மலை-போன்ற எழுநிலைமாடத்தையும் இடித்தல் எளிது. கிணற்றையும் குளத்தையும் வெட்டுதல் அரிது; ஆயின், அவற்றைத் தூர்த்தல் எளிது. எதனையும் ஆக்குதல் அரிது; அழித்தல் எளிது. மக்களிடையே ஒற்றுமையை வளர்ப்பது அரிது; ஆயின், வேற்றுமையை விளைப்பது எளிது. மக்களை நல்லோர் ஆக்குதற்கு நாலாறு ஆண்டுகள் வேண்டும்; அவர்களை அல்லோர் ஆக்குதற்கு ஆறுநொடியும் வேண்டா!

நம்மைப் பிரித்துப் பிரித்து, நமக்குள் சாதிமதப்பகையினை உண்டாக்கி, அதனால் நமக்குள் ஒற்றுமையைக் குலைத்து, வேற்றுமையை விளைத்த வெள்ளையன் மேற்கொண்ட சூழ்ச்சியினால் நாம் பட்ட துன்பம் போதாதோ! இனியும் படவேண்டுமோ! வேண்டியவர்சொல் வேம்பும் கடுவும்போல் வெறுப்பூட்டும்! வேண்டாதோர்சொல் கரும்பைப்போல விருப்பத்தை ஊட்டும்! இது உலகியற்கை! எவர்உரை நம்மையும் நம் நாட்டையும் நலமுறச்செய்யும்? எவர்உரை நலிவிக்கும்? எது தக்கது, எது தகாதது?—என்பவற்றை நம் மக்கள் இன்னும் பகுத்து உணரவில்லையே! இது விதி! விதி!! விதியின் விளையாட்டு!!

தமிழர் தாழ, தமிழர் வருந்த, தமிழர் தம்முள் போரிட்டு ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு அழிய, மானம் இழக்க, கருவியாய்த் தமிழரே இருத்தல் வேண்-

டுமோ ? இவர்கள் தமிழ்க்குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்புகள் என்று எதிர்காலத்திலும் இகழப்படுதல் உறுதி.

தமிழன்பர்கள் எதனையும் எண்ணித் துணிய-வேண்டும்.

எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு
எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு—

இம் மறைக்கருத்துக்களை மறவாமல் மனத்தில் இருத்-திக்கொள்ளல் வேண்டும். கறந்த பால் மடியில் புகாது. கடைந்த வெண்ணெய் மோரில் புகாது. உடலை விட்டுப் பிரிந்த உயிர் அவ்வுடலில் பின்னும் புகாது. வஞ்சகர் பிரிக்க, அதனால் பிரிந்த மக்கள் பின்னர் ஒன்றுபடார். 'பழம்பகை நட்பாதல் இல்'; ஆகலின், நல்லவற்றைச் செய்யாவிடினும், பொல்லாதவற்றைச் செய்தலை நீக்குக. அவற்றால், தாமும் நலம்பெறுவர் ; நாடும் நலமுறும்.

ஒருவர் எத்துணை மக்களை எவ்வளவு காலம் ஏமாற்ற முடியும் ? அவர்கள் விழித்துக்கொள்ளுங் காலம் அண்-மையில் வந்துளது. இவர்கள் இன்று இசையைப் பெற்று-விட்டதாக மகிழலாம். இது இசையோ ? அன்று ; இறுதி-யில் வசையாகவே வந்து முடியும்.

நீரும் எருவும் நிரப்பிய நாற்றங்காலில் உள்ள செந்-நெல்நாற்றினைப் புழு அரிக்க விட்டுவிடின், அந் நாற்றுப் பின்னர் வளம்பெற வளருமோ ? நல்விளைவை நல்குமோ ? நல்காதே ! அதுபோல, இளைஞர்உள்ளத்தில் இந் நச்சுவிதையை ஊன்றிவிட்டால், அது நச்சுமரமாய் வளர்ந்து, நச்சுக்கனியை விளைத்து, நாட்டை நலிவித்துவிடும் என்பதனை நம் நாட்டுக்குடிகள் இனியும் உணராரோ ?

தற்காலத்தமிழரின் கடமைகள்

இங்குக் கூறியவற்றால், ஒவ்வொருவரும் தம் மதத்தி-லும் தம் கொள்கையிலும் பற்றேறவைத்தலாகாது என்பது கருத்தாகக் கொள்ளல் ஆகாது. அவரவர் தம் தம் மதத்திலே விருப்புக்கொள்ளல் வேண்டும் ; அவற்றில்

உறுதி வேண்டும்; உறுதியும் ஊற்றமும் ஊக்கமும் ஒருமைமனமும் உள்ள வாழ்க்கையே பயனளிக்கும். ஆனால், பிறமதத்தினரையும் பிறசாதியினரையும் வெறுத்தலாகாது.

குலமகள் தன் கொழுநனையே குலதெய்வமாகக்கொண்டு தொழுது சிறப்புஅன்பு செலுத்துவது போல, ஒவ்வொருவரும் தாம் வழிபடுங் கடவுளையே தொழுது வாழ்த்தி வணங்கி, சிறப்புஅன்பு செலுத்துதல் வேண்டும்; அதே அன்புடன் மறந்தும் புறம் தொழலாகாது.

கணவனை விரும்புங் காதலி பிறரை வெறுக்கவேண்டும் என்பதுண்டோ? கொண்டானிடம் காட்டுங் காதலுக்கு (சிறப்புஅன்புக்கு) உரியவன் கொண்டானே. ஆயின், அவளுடைய பொதுஅன்புக்கு உரியவர் தந்தை, மைந்தர், உடன்பிறந்தோர், உற்றார், ஊரார் முதலியோர். அதுபோல,சிவனைச்சிறப்பன்புடன் வழிபடுவோன் விஷ்ணுவையோ வைணவனையோ, புத்தனையோ பௌத்தனையோ வெறுக்கவேண்டா. அவரிடம் பொதுவன்பு பாராட்டலாம்; விருப்பு இல்லை எனினும், வெறுப்பு இருத்தல் வேண்டா. வெறுப்பிலிருந்து வெகுளியும், வெகுளியிலிருந்து பகைமையும், பகைமையிலிருந்து பிணக்கும் போரும் பிறக்கும்; பின்னர், கொலையும் கொள்ளையும் மலியும்; நாடு அமைதியை இழக்கும்; குழப்பத்தில் மூழ்கும்.

ஆகலின், மக்கள் உடன் மேற்கொள்ளவேண்டுவது யாதெனின், பிறமதத்தவரையும் பிறகுலத்தவரையும் வெறுக்காமையே.

சென்றது செல்க; கழிவிரக்கம் வேண்டா; 'கற்றோர்முன் தோன்றா கழிவிரக்கம்.' குழிப்பிள்ளையை எடுத்து இழவு கொண்டாட வேண்டா. பிறரிடம் பிழைகள் இருப்பினும், பிறர் நம்மைப் பகைக்கினும், அவர்பிழையைப் பொறுப்போம்; அவர்பகையை அன்பால் வெல்வோம்.

அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை

என்பது மறைமொழி அன்றோ? தீமைசெய்வார்க்கும் நன்மை செய்வோம்.

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு?

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்.

நம்மை இகழ்ந்தமை தாம் பொறுப்பதன்றி மற்று
எம்மை இகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று
பரிவதூஉம் சான்றோர் கடன்.

பொய்யில்புலவராகிய சான்றோர் பாடிய இப்பாட்டுக்கள் பொருளற்ற கடலோசையோ ?

தமிழன், இனி ஆக்கவேலையில் ஈடுபடுவானாக. எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே தமிழன் கடமை.

உயிர்கள் பசியாலும், பிணியாலும், பகையாலும் துன்புறுகின்றன. அத் துன்பங்களைத் துடைப்பவனே தொண்டன். பசித்தீயைத் தணித்து, பிணியைப் போக்கி, பகையை நீக்குதல் வேண்டும். இவற்றைச் செய்து பின்னர் மந்திரத்தாலும் மலராலும் நீராலும் சாந்தாலும் ஆண்டவனை வழிபடுவதே அடியாரின் கடமை. முன்னது இன்றி, பின்னது ஒன்றே இருப்பின், அது இறைவழிபாடே ஆகாது. இறைவனும் அதனை ஏற்றுக்கொள்ளான். பிறர் படுந் துன்பத்தைக் கண்டு, 'ஐயோ' என்று இரங்காதவனும் அன்பன் ஆவனோ ?

கொன்று உயிர் உண்ணும் வியாதி பகை பசி தீயன எல்லாம்
நின்று இவ்வுலகில் கடிவான் நேமிப்பிரான்தமர் போந்தார்

என்று சடகோபன் அருளிச்செய்திருப்பதால், இத் துன்பங்களைத் துடைப்பதே நம் கடமை என்று உணர்க.

ஆறுகளையும் குளங்களையும் வெட்டுக. உணவுக்கும், உழவுக்கும் வேண்டும் நீரைப் பெறுக. பிடிநெல் விளையும் நிலத்தில் படிநெல் விளையும்படி செய்க. எல்லாருக்கும் உணவையும் உடையையும் உறையுளையும் உதவுக. பசியாலும் பட்டினியாலும் வருந்தி எவரும் இறத்தலாகாது. திக்கற்ற சிறுவர், தீராத நோய்வாய்ப்பட்டோர், உறுப்புக்குறைபட்டோர், மூப்பால் முடங்கினோர் முதலானோர் பிச்சையெடுத்து வயிறு வளர்த்தலாகாது. அவர்களுக்கென்று ஏழையில்லங்கள் நிறுவி, சோறும் கூறையும் அளித்து உதவுதல் வேண்டும். இக் கடமை அரசியலாரையும் தமிழ்ச்செல்வரையும் சார்ந்தது. தமிழ்நாடு பிச்சைக்காரர் மலிந்த நாடு—என்னும் பழி வாராமல் தடுப்பது நம் கடமை.

உயிர்களுக்கு நோய் வாராமல் தடுக்கவேண்டும். வந்த நோய்க்கு மருந்து உதவி, அந் நோயைப் போக்கவேண்டும்.

கிராமக்கைத்தொழில்களை வளர்த்து அனைவர்க்கும் வேலை அளிக்கவேண்டும். இந் நாட்டில் வேலையில்லாத மக்களே இருத்தல் கூடாது. 'நம் நாட்டில் செய்த பண்டங்கள் குணத்தில் குறையினும், விலையில் மிகினும், அவற்றையே வாங்கி நம் நாட்டுக்கைத்தொழில்களை ஆதரிக்க வேண்டும்' என்னும் நாட்டுப்பற்று ஒவ்வொருவர் மனத்திலும் வேரூன்ற வேண்டும்.

தமிழ்நாடு செழிக்கவேண்டும். தமிழர் நல்வாழ்வும் பெருவாழ்வும் பெற்றுத் திகழவேண்டும்.

தமிழா, உன் **மொழி தமிழ்**; உன் **மதம் தமிழ்**; உன் **இனம் தமிழ்**; உன் குலம் **தமிழ்**; ஆகலின், உன் வாழ்வு **இனிமையே வாய்ந்தது**. தலை நிமிர்ந்து நட. எவனுக்கும் தாழாதே. ஆயின், அன்பினுக்கு அடிமையாய் இரு.

தமிழன்பர்களே, "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; நம்முள் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு" என்பதனை நன்கு உணர்ந்து, இனியாயினும் ஒற்றுமைப்பட்டு வாழ்ந்து உயர்வோமாக!

தமிழன் தமிழனோடு ஒன்றுபட்டு வாழும் வகையை அறிந்து வாழின், பின்னர், இந்தியநாட்டில் உள்ள தெலுங்கனோடும், மலையாளியோடும், வங்காளியோடும், மராட்டியனோடும், மற்றும் பிறரோடும் ஒன்றுபட்டு வாழும் வகையை அறிவான். எந் நாடும் தனித்து வாழ்தல் முடியாது என்பதனை உணர்ந்த எல்லாரும் ஒன்றுபடுவர். இன்று, இந்தியநாடு, தான் பெற்றுள்ள உரிமையை இழவாமல், இன்பத்தோடும் ஒற்றுமையோடும் இனிது வாழும்; வளரும்; உலகினுக்கு வழிகாட்டும்.

அன்பு, அருள், அறிவு, அமைதி, ஒழுக்கம், **ஒற்றுமை** இவையே இன்று நமக்கு இன்றியமையாதவை.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரத மணித் திருநாடு!

... அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை-14

பிரதிகள் கிடைக்குமிடம்:

வழித்துணை நிலையம்

13, மஹாலக்ஷ்மி தெரு

தியாகராயநகர் :: சென்னை-17